# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 08 புதன்கிழமை 24.07.2024 கதிர் 310







# பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு இடைக்காலத்தடை பிறப்பித்தது உயர் நீதிமன்றம்!

## குறித்த பதவிக்கு ஒருவரை நியமிக்கவும் ஜனாதிபதிக்குப் பணிப்பு

**தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றுவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.**

**இதன்படி, இந்த இடைக்காலத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் காலப்பகுதியில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சட்டத்திற்கு அமைய பொருத்தமான நபரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

**யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவுகளை அறிவித்துள்ளது.**

**இந்த மனு மீதான விசாரணையில் நீதிமன்றத்தின் முன் வலுவான வழக்கை நிறுவுவதில் மனுதாரர்கள் வெற்றி பெற்றுள்ளதாக நீதிபதி யசந்த கோதாகொட தெரிவித்தார்.**

2➤



## தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது!




இன்று நடைபெற விருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. முன்னதாக இந்தக் கூட்டம் இன்றும் நாளையும் நடத்துவதற்குத் தீர்மா னிக்கப்பட்டிருந்தது

இதன்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது மற் றும் அதனை நடத்தும் திகதியைத் தீர்மானிப்பது தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

2➤

## பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் குளறுபடி! சஜித் பிரேமதாச சபையில் குற்றச்சாட்டு



நாட்டின் பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பான நியமனக் கடிதம் திரிபுபடுத்தப்பட்ட பின்னரே சபாநாயகரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று சபையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தேசபந்து தென்னகோனின் நியமனம் முற்றிலும் தவறானது. சபாநாயகரால் அனுப்பப்பட்ட கடிதம் திரிபுபடுத்தப்பட்ட கடிதமே.

இதன் அடிப்படையில் அரசியலமைப்பை ஜனாதிபதி அப்பட்டமாக மீறியுள்ளார். அரசியலமைப்பை மீறியே பொலிஸ் மா 2➤

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையிலான கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வில் 30 எம்.பி.க்கள் புதிதாக இணைவர்

### ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி.தெரிவிப்பு



அடுத்து வரவுள்ள தேர்தலையொட்டி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் ஏற்படுத்தப்படவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே ரஞ்சித் மத்துமபண்டார மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "இந்த வாரத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் இறுதியில் நடத்தப்பட வேண்டும்.


அத்துடன், நாடாளுமன்றத்தில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி போட்டியிடவுள்ளது. சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து மேற்படி பாரிய கூட்டணியை உருவாக்கி வருகின்றனர்.

அதன்படி, ஒகஸ்ட் 8 ஆம் திகதி ஐக்கிய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பணம் இடம்பெறும். சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுவார். ஐக்கிய மக்கள் சக்தி கட்டியெழுப்புகின்ற இந்த கூட்டணியில் ஊழலற்ற, அனுபவம் வாய்ந்த தலைவர்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் அடங்கிய பெரும் பிரிவொன்று இணையப் போகின்றது.

2➤

## ஜனாஸா எரிப்புக்கு மன்னிப்பை விட தண்டனையே கொடுப்பதே அவசியம்!

### அதாவுல்லா எம்.பி. சபையில் வலியுறுத்து



ஜனாஸா எரிப்பு தொடர்பாக மன்னிப்புக் கொடுப்பதை விடுத்து அதற்குக் காரணமானவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.எம். அதாவுல்லா வலியுறுத்தியுள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை மீறி ஜனாஸாக்களை எரிக்க வர்த்தமானி ஒன்றை அப்போதைய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி வெளியிட்டிருந்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஜனாஸாக்களை எரித்தமை குறித்து மன்னிப்புக் கோரியமை நல்ல விடயம். ஆனால், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் மீறி ஜனாஸா எரிக்க வர்த்தமானி வெளியிடப்பட்டமையால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக நான் பல தடவை இந்தச் சபையில் கேள்வியெழுப்பியுள்ளேன். எனவே மன்னிப்புக் கேட்பதை விட அதற்கான தண்டனையை யாருக்கு வழங்குவது என்பதை இந்த நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.எம்.அதாவுல்லா மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## ஐக்கிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிகழ்வின் போது 30 க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய உள்ளனர். பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை மேற்கொண்டு

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீட்டெடுக்கும் பணியினை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும். மேலும், ஐக்கிய மக்கள் கூட்டணியானது அனைவரும் ஓரணியில் நிற்கக் கூடிய ஒரு கூட்டணியாகவும், இலங்கையில் ஒரு வலுவான மற்றும் பரந்த கூட்டணியாகவும் அமையும்" - என்றார். (ரெஜ-59)

## பொலிஸ்மா அதிபர் நியமனத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிபரை ஜனாதிபதி நியமித்துள்ளார். அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்தை திரிபுபடுத்தி சபாநாயகர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை இந்த சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

இது அரசியலமைப்புச் சட்டத்தை அப்பட்டமாக மீறுவதாகும். இந்த மோசடி கடிதத்தின் அடிப்படையில் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை நியமித்தது சட்டவிரோதமானது. ஜனாதிபதியும் அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறியுள்ளார்.

இது பிரதமருக்குத் தெரியும். பிரதமரால் இதற்கு பதில் சொல்ல முடியாது. சபாநாயகரும் அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறியுள்ளார். அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?ஜனாதிபதி இந்த விடயத்தை நன்கு அறிந்தவர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை" என்று குறிப்பிட்டார். (04)

## பொலிஸ்மா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, குறித்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கு எதிராக வழக்கு விசாரணையை நடத்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதுமட்டுமின்றி, இந்த மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை, பிரதிவாதியான தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபர் பதவியில் கடமையாற்றுவதற்கும் தனது அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கும் கடமைகளைச் செய்வதற்கும் தடை விதிக்கப்படுவதாக நீதிபதிகள் அமர்வு தெரிவித்துள்ளது.

அதன்பிறகு, மனுக்கள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், அவற்றை 6 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், நவம்பர் 11 ஆம் திகதி மீண்டும் மனுக்களை விசாரிக்கவும் உத்தரவிட்டனர்.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, அதி வண. கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்டோர் சமர்ப்பித்த 9 அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்று உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (04)

## தேர்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, எவ்வாறான பேச்சுக்கள் எமது சூழலில் இடம்பெற்றாலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியது போன்று இந்த வாரம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி இந்த வார இறுதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்று என தேர்தல்கள் ஆணைக்குழுவும் குறிப்பிட் டிருந்தது. (04)

## பேருந்தைக் கடத்தியவர் கைது!

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தைத் திருடிச் சென்ற நபர் ஒருவரை மொரட்டுவை, ராவத்தவத்த பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாணந்துறை, மினுவன்பிட்டிய பொது மயானத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தையே சந்தேகநபர் கடத்திச் சென்றுள்ளார்.

மினுவன்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். (04)

# அரசாங்கச் சொத்துக்களை சரிவர முகாமைத்துவம் செய்யத் தயார்!

## நிதி இராஜாங்க அமைச்சர் கருத்து

அரச சொத்துக்கள் முகாமைத்துவச் சட்டத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துக்களையும் விசாரணை செய்து முறையான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்குத் தயார், என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

1,600 க்கும் மேற்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் உள்ளதாகவும், அவற்றின் சொத்துக்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிறுவனங்களில் சுமார் 91,000 வாகனங்கள் இருப்பதாகவும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி, அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்து, மக்களுக்குப் பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (04)

# முட்டையின் சில்லறை விலையை 40 ரூபாவாகக் குறைக்க முடியும்!

## அமைச்சர் நளின் வலியுறுத்து

முட்டை ஒன்றின் சில்லறை விலையை 40 ஷரூபாவாகக் குறைக்க முடியும், என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் முட்டை விலையைக் குறைக்க முட்டை உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

முட்டை ஒரேயடியாக 6 ஷரூபாய் விலை குறைந்துள்ளது. இது தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபையின் அறிக்கைகளையும் பெற்று வருகின்றேன். தொடர்ந்து சோதனை செய்து வருகிறோம்.

40 ரூபாய்க்குக் கூட முட்டையை விற்பனை செய்ய முடியாவிட்டால் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். ஏனெனில் பண்டிகை காலம் டிசம்பரில் தொடங்கும். கேக் தயாரிப்பாளர்கள் நிறைய முட்டைகளை எடுத்துக்கொள்கிறார்கள்.

இவர்களுக்குத் தேவையான முட்டைகள் இல்லை என்றால், அவர்களுக்கு தேவையான முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும். இல்லை எனில், சரியான விலையில் முட்டைகளை வழங்கி நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டும்" என்றார் அவர்.

# தோட்டத்தொழிலாளர்களுடைய சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்!

## அரசின் நிலைப்பாடு அதுவே - அமைச்சர் பிரசன்ன

*பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இன்னமும் இருப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.*

*இந்த விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் தலையிட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.*

*இன்று நாடாளுமன்றத்தில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*(04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





# மாணவர்களுக்கு யாழ்ப்பாண றோட்டறிக்கழகத்தின் உதவி!

Sleeping Children Around the World அமைப்பின் உதவியில் களனிய றோட்டறிக் கழகத்துடன் இணைந்து யாழ்ப்பாண றோட்டறிக் கழகம் "SLEEPING CHILDREN AROUND THE WORLD" எனும் திட்டத்தின் கீழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதன் முதல் கட்டமாக, நேற்று வலிகாமம் வலயத்தினைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 13 பாடசாலைகளின் 1016 மாணவர்களுக்கு யாழ் விக்ரோறியாக் கல்லூரியில் வைத்து 15,000 ஷரூபாய்க்கும் அதிகமான பெறுமதிகொண்ட பொருட்களும் காலணிகளும் வழங்கப்பட்டன. (04)

# யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா – 2024 'எங்கட புத்தகங்கள்' காட்சியறையும் இடம்பெறும்!

எதிர்வரும் ஒகஸ்ட் 9,10 மற்றும் 11ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் காலைக்கதிர் ஊடகக் குழுமத்தின் ஊடகப் பங்களிப்போடு

'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024'

இடம்பெற இருக்கிறது.

நாற்பதுக்கும் மேற்பட்ட காட்சியறைகளில், இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட உள்ளன.




இந்தக் கண்காட்சி விற்பனையில் 'எங்கட புத்தகங்களும்' பங்குபற்ற உள்ளது.

ஈழத்து நூல்களுக்கான காட்சியறையாக, ஆயிரத்துக்கும் அதிகமான தலைப்புகளில் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள், சஞ்சிகைகளுடன் எங்கட புத்தகங்கள் காட்சியறை அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'எங்கட புத்தகங்கள்' காட்சியறையில் கண்காட்சி, விற்பனைக்காக புத்தகங்களை ஒப்படைக்க விரும்புபவர்கள் அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளனர். (04)






# மிதி வெடி



நாட்டில இலஞ்சம், ஊழல் இல்லாத அரசாங்க அலுவலகம் இல்லை எண்டு சொல்லாம் பாருங்கோ... அந்தளவுக்கு அநியாயம் மலிஞ்சு போய்க் கிடக்குது.

உதைச் சொல்லுறதுக்கு உவர் ஆர்? உவற்றை காசையே நாங்கள் கொண்டு போறம் எண்டு புறு புறுக்கிறது எனக்குத் தெரியும். ஆனா என்ன செய்யுறது பாருங்கோ, "ஆத்தில வருகுது.... அண்ணை பிடி... தம்பி பிடி..." எண்டு நீங்கள் அள்ளிக் கொண்டு போறதுக்கு இது என்ன உங்கட அப்பன், ஆத்தை வீட்டுச் சொத்தே?

ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்துக்குக் குடுக்கிற வரிப் பணத்தில தான் நீங்கள் வாழுறியள் எண்டதை மறந்து போடாதேங்கோ.... பொறுப்புள்ள ஒரு அரச இயந்திரத்தில ஒவ்வொரு சதத்துக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடமை அத்தின பேருக்கும் இருக்குது பாருங்கோ.....!

அந்த டாக்குத்தர் சின்னப் பொடியன் தான்... சொன்ன முறையில சரி, பிழை இருக்கலாம்... ஆனாச் சொன்ன விசியத்தில இருக்கிற பிழை சரியளையும் பாக்கத்தானே வேணும்....?

அந்தப் பொடி பத்த வைச்ச நெருப்பு கொழுந்து விட்டு எரியுது! ஆனாலும் பாருங்கோ அவருக்கு வாய் சரியில்லை எண்டு தான் சொல்ல வேணும். அவர் சொல்ல வந்த விசியங்கள் பற்றிக் கொஞ்சமாவது யோசிச்சுப் பாப்பம் எண்டு வெளிக்கிட்ட நேரத்தில அந்தப் பொடி போய் "தலைநகரம் டீ.வி" யில உளறிக் கொட்டினதக் கேட்டால் மானமுள்ள தமிழன் எவனும் அவனுக்குத் தொடர்ந்து முண்டு குடுக்க மாட்டாங்கள் எண்டு தான் சொல்ல வேணும்!!

விடுதலைப் போராட்டம் தோத்துப் போனதோ.... தோக்கடிக்கப்பட்டதோ எண்டது இன்னமும் ஆராய்ச்சிக்குரிய விசியமாத் தான் இருக்குது. இத்தனை வருச காலமா அந்தாள் கட்டிக் காத்த ஒட்டுமொத்த உணர்வும் இன்னும் எங்களுக்குள்ள உறங்கிக் கொண்டு தான் இருக்குது. இருக்கிறாரோ, இல்லையோ எண்டு தெரியாமல் இன்னமும் அந்தாள் எங்களுக்குள்ள வாழ்ந்து கொண்டு தான் இருக்குது...

இந்தப் பொடிப்பயல் அந்தாளப் போய் பிழை சொல்லுறார்.... "அவர் எடுத்த முடிவு பிழை...... நாங்கள் சரியாச் செயற்பட்டிருந்தா முள்ளிவாய்க்காலில போய் இத்தின பேர் செத்திருக்க மாட்டினம்" எண்டு அவரைப் பிழை சொல்ல வெளிக்கிட்டு, "அவரையே எதிர்த்து நிண்ட இன்னுமொருத்தரை"த் தெய்வம் எண்டு வேற கொண்டாடுறார்.

மூச்சுக்கு முந்நூறு தரம் இவர் நல்லவர் - வல்லவர் எண்டு அளப்பறை பண்ணியிருக்கிறார்.

ரெண்டு விசியம் இருக்குது பாருங்கோ.... எங்களுக்குள்ள வாழுற தெய்வத்தைத் தாழ்த்திப் பேசினதும், எங்களால ஒதுக்கப்பட்ட இவரைத் தூக்கிக் கொண்டாடுறதையும் எங்களால ஏற்றுக் கொள்ள முடியாது பாருங்கோ....!

அந்தாளைச் சரி சமத்தியா விமர்சிக்கிறதுக்கு உவருக்கு என்ன அருகதை இருக்குது...? அந்தாளிண்ர காலத்தில... "..............." பிடிச்சு ஒழுங்கா ".........." கூடப் பெய்யத் தெரியாத வயசில இருந்திருப்பார்... உவர் அவரைப் பற்றிக் கதைக்கிறார்.... என்ன செய்யுறது? எல்லாம் காலக் கொடுமை பாருங்கோ....

அதை விடுங்கோ... இலஞ்சம், ஊழல் எண்டு கதைக்க வெளிக்கிட... அதைக் கிண்டிவிட்ட டாக்குத்தர் நினைவுக்கு வரப் பொரிஞ்சு தள்ளிப் போட்டன்!

அதில்லை இப்பப் பிரச்சினை.... இலஞ்சம், ஊழல் எண்டு சொல்லி அதை வெளிப்படுத்திறம் எண்டு கிளம்பியிருக்கிற பேர்வழியளும் சும்மா இல்லைப் பாருங்கோ... தங்கட, தங்கட தனிப்பட்ட வன்மங்களைத் தீர்த்துக் கொள்ளுறதுக்குத் தான் உதையெல்லாம் எடுத்துக் கதைக்கினம் கொஞ்சப்பேர்!

தங்களுக்குத் தனிப்பட்ட முறையில "செல்வாக்கு" காட்டிற அதிகாரிகளையும், தனிப்பட்ட ஆக்களையும் தூக்கிப் பிடிக்கிறதுக்காக ஒரே விசியத்தில நிண்டு குத்தி முறியினம் பாருங்கோ....

டாக்குத்தர் சொன்ன விசியத்தில தனியார் வைத்தியசாலைகளைத் தூக்கித் தூக்கி அடிச்சவை, தனியார் "பாமசி"களில நடக்கிற கூத்துகளைச் சொல்ல வெளிக்கிட அடக்கி வாசிக்கினமாம்!

அதில வேடிக்கை என்னவெண்டா "வீசிற காற்று"ப் பெயரால இருக்கிற "பாமசி" ஒண்டு "கருணை" உள்ளம் கொண்டவரின்ட செல்வாக்கால பதிவு, பத்திரம் ஒண்டும் இல்லாமல் வியாபாரம் செய்தவை எண்டு சொல்ல வந்தவுடன, "அட்மின்" ல இருக்கிற ஒருத்தர் விழுந்து கட்டிக் கொண்டு வந்து "நாங்கள் இங்க தனியார் வைத்தியசாலையளைப் பற்றித்தான் கதைக்கிறம். "பாமசி" யளைப் பற்றிக் கதைச்சால் "போஸ்ட்"ஐத் தூக்கிப் போடுவன்.... "போஸ்ட்" போடுறவையளையும் ஈவிரக்கம் இல்லாமல் அப்புறப்படுத்திப் போடுவன்" எண்டு வெருட்டியிருக்கிறார். மற்றவையளும் அதைக் கேட்டுத் தங்கட "நவ துவாரங்களை" யும் பொத்திக் கொண்டிருக்கினமாம்.

அரைச்ச மாவை அரைக்குமாப் போல "அர்ச்சுனா" அலப்பறை தான் "குறூப்"லயும் போகுதாம்!

அப்பப் பாருங்கோவன்.... ? உந்த "மாஃபியா.... மாஃபியா" எண்டு கூவிக் கொண்டு "மெடிக்கல் மாஃபியா"வைக் கைகாட்டுற இந்த "(சோஷியல்) மீடியா மாஃபியா" வை என்னெண்டு சொல்லுறது?

மற்றவனைக் கை நீட்டிக் குற்றம் சொல்லுறதுக்கு முன்னம் ஒவ்வொருத்தரும் தன் தன் கைகள் சுத்தமா இருக்கோ எண்டு சுய பரிசோதனை செய்து பாக்க வேணும் பாருங்கோ....!!!!

நரமுனி



# ‘திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளரை அறிவிப்போம்!’

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

*ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (23) நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலின் பின்னர் மேலும் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ‘ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்வைக்கும் வேட்பாளர் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. உரிய நேரத்தில் கட்சி வேட்பாளரை முன்வைப்போம்’ என்றார். –*

*(ரெஜ-60)*

# தொழிலை இழந்த மின்சார சபை ஊழியர்களுக்காக வாதிட அவர்களை தூண்டிய ஜே .வி.பி.யின் சட்டத்தரணி 58 லட்சம் ரூபாய் வசூலித்துள்ளார்

## மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர குற்றச்சாட்டு



தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட்டு தமது தொழிலை இழந்துள்ள 62 இலங்கை மின்சார சபை ஊழியர்களின் வழக்கு விசாரணை நடவடிக்கைகளுக்காக மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வட்டகல மின்சார ஊழியர்களிடமிருந்து 58 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளார் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மின்சார சபை ஊழியர்கள் சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த ஜனவரி மாதம் முதல், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான பல தொழிற்சங்கங்கள் புதிய மின்சாரச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, மின்சாரத் துறையில் உள்ள அனைத்தும் தனியார் மயமாக்கப்படும் என்ற மாயையை உருவாக்கி தமது அரசியல் இலக்குகளை அடையும் நோக்கில் தமது தொழிற்சங்கங்களை தூண்டி போராட்டங்களை நடத்தினர்.

போராடினாலும் பரவாயில்லை. ஆனால், அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். அப்படி செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்திருந்தோம். அவை எதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதனால், தொடர்ச்சியாக

மூன்று நாட்கள் கருமை பீடங்களை மூடச்செய்தமை மக்களை சிரமத்திற்கு உள்ளாக்கியது. இவ்வாறான செயலில் ஈடுபட்ட 62 ஊழியர்கள் அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இப்போது அவர்கள் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாம் அறிவுறுத்தியுள்ளோம்.

இந்த போராட்டங்களை நடத்துமாறு தூண்டிய அரசியல் கட்சியினர் அவர்கள் சார்பாக வாதிடுவதற்காக தொழிற்சங்கங்களிலிருந்து பணம் வசூலித்து வருகின்றனர் என பல தொழிற்சங்கங்கள் இது குறித்து என்னிடம் சில தகவல்களை தெரிவித்துள்ளன.

அதாவது, தொழிலாளர்களை வீதிக்கு இறக்கி போராட்டங்களை நடத்தி விட்டு இப்போது அவர்களுக்காக வாதிட ஜே.வி.பியின் சட்டத்தரணி சுனில் வட்டகல தொழிற்சங்கங்களிடமிருந்து 58 இலட்சம் ரூபாவை சட்ட சேவைக் கட்டணமாக பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த 62 அப்பாவித் தொழிலாளர்கள் தொழிலின்றி 6 மாதங்களாக வீட்டில் உள்ளனர். அவர்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்திய இதர மின்சார சபை ஊழியர்களிடமே அவர்களுக்கான பணமும் அறவிடப்பட்டுள்ளது” - என றார். (ரெஜ-62)



# மகளிர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது!

9 ஆவது ஆசியக் கிண்ண மகளிர் கிரிக்கெட் தொடரில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில் இந்தியா, நேபாள நாட்டு அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் முதலில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதையடுத்துக் களமிறங்கிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. ஷபாலி வர்மா 81, தயாளன் ஹேமலதா 47 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

179 என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய நேபாள அணி 20 ஓவர்கள் நிறைவில், 9 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற, இந்திய அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்திய அணியின் தீப்தி ஷர்மா மூன்று விக்கெட்டுகளையும், அருந்ததி ரெட்டி மற்றும் ராதா யாதவ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளையும், ரேனுகா சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நேற்றைய போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய மகளிர் அணி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.



# இன்றைய முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு வெற்றி

இலங்கை, தம்புள்ளை ரங்கிரி சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வரும் மகளிர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இன்றைய முதற் போட்டியில் பங்களாதேஷ் அணி மலேசியா மகளிர் அணிக்கெதிரான போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் தமக்கான இரண்டாம் சுற்று வாய்ப்பை அந்த அணி தக்கவைத்துள்ளது.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் இலங்கை அணி தாய்லாந்து அணியை வெற்றி பெற்றால் அடுத்த சுற்று வாய்ப்பு இலங்கைக்கு உறுதியாகும். மலேசியா அணி விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்து அடுத்த சுற்று வாய்ப்பை இழந்துள்ளது



# சிறப்பாக செயற்பட்ட செயலகங்களுக்கு கணினி உபகரணங்கள் வழங்கப்பட்டன

(சர்ஜூன் லாபீர்)

உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலகம் சிறப்பாக செயற்பட்டதாக அடையாளப்படுத்தப்பட்டது.

அதனைக் கௌரவிக்கும் முகமாக 4 கணினிகள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று (23) பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஜனதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேசிய ரீதியாக சிறப்பாகச் செயற்பட்ட பிரதேச செயலகங்களுக்கு கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லமினுடைய ஒழுங்குபடுத்தல் மற்றும் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணினி உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் அரசாங்க அதிபரும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவருமான ஐ.எம் ஹனீபா,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (காணி) எப்.நபீரா, தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸாருத்தீன், கிராம சேவகர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி மாணவன் ஹறிபிரஷாத்

# சர்வதேச மல்யுத்தப் போட்டியில் பங்கேற்க தாய்லாந்து பயணம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தாய்லாந்தில் நடைபெறும் சர்வதேச மட்டத்திலான ஆசிய மல்யுத்தப் போட்டியில் கலந்துகொள்ள மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவன் ஹறிபிரஷாத் மற்றும் பயிற்றுவிப்பாளர் திருச்செல்வம் ஆகியோர் தாய்லாந்து பயணமானார்கள்.

இவர்கள் இருவரையும் வழியனுப்பி வைக்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் கல்லூரிக்கும் பெருமையினை பெற்றுத்தந்துள்ள ஹறிபிரஷாத் மற்றும் திருச்செல்வம் ஆகியோருக்கு கல்விச் சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

இப்போட்டிக்கு இலங்கையிலிருந்து செல்லும் ஒரேயொரு தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.




வட மாகாண மட்ட கராத்தேப் போட்டிகள்

# தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் மாணவர்கள் தேசிய மட்டத்திற்குத் தெரிவு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கராத்தேப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மாணவி ஐங்கரன் மிசாயினி முதலாம் இடத்தையும், 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கராத்தே போட்டியில் ஐங்கரன் சாகித்தியன் மூன்றாம் இடத்தையும் பெற்று இருவரும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றன.

# Nippon Paint Product Corner இன் பிரமாண்ட காட்சியறை திறப்பு






Dimo Retail உடன் இணைந்து னேிழலீயவைவ ீசழனரஉவ ஊழசநெச இன் பிரமாண்ட காட்சியறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் னேிழலீயவைவ டுயமெய நிறுவனத்தின் பணிப்பாளரும் பொது முகாமையாளருமான நேமந்த அபேசிங்க கலந்துகொண்டார்.

இந்த இரு நிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பு, தங்கள் பிரீமியம் தயாரிப்புகளை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிப்பதாக னேிழலீயவைவ டுயமெய நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது அவுஸ்திரேலியாவின் ளுநடடநலள நிறுவனத்தினது உயர்தரம் மிக்க வீட்டு உபயோகப் பொருட்களையும் னேிழலீயவைவ டுயமெய நிறுவனம் இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு ஆதரவாக செயற்பட மொட்டு கட்சியினர் சிலர் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் ஆலோசனை

## பெரமுன கட்சியின் 75 எம்.பி.க்கள் இவர்களுக்கு ஆதரவாம்

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு ஒருவரை நியமித்தால் அதற்கு எதிராக செயற்பட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 12 மாவட்டங்களின் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் படி கடந்த 22 ஆம் திகதி இரவு கொழும்பு மலலசேகர மாவத்தையிலுள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த பொது ஜன பெரமுனவின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு மாறாக கட்சியானது வேறு ஒருவரை வேட்பாளராக தீர்மானித்தால் அதற்கு எதிராக செயற்பட்டு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிப்பது தொடர்பில் இதன் போது அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏறக்குறைய 75 பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அவர்கள் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாவட்ட மட்டத்தில் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறித்த மாவட்டங்களின் பிரதேச சபை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரை ஒன்று திரட்டி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெஜ-61)








# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் பாராட்டும் - கௌரவிப்பும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (21) சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ. பீர்முகமது, சட்டமுதுமாணி, சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் மாவட்ட உத்தியோகத்தர், பிரதேச செயலக நிர்வாக உத்தி யோகத்தர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், ஆசிரியர்கள், மூத்த கலைஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் ஹஸீதா மற்றும் சிறுமிகளின் பரத நாட்டியம் உட்பட பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பாடநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பாராட்டு கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றன.

நிகழ்வில், முக்கிய அம்சமாக சாய்ந்தமருதில் பிரதேச செயலாளராக இருந்து ஊரின் நலன் கருதி, தன்னலம் பாராது சேவையாற்றி அரும் பணியாற்றிவரும் சேவைச் செம்மல் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸானினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மிகக் குறுகிய காலத்தில் சாய்ந்தமருதில் கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் அதில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் சித்திரம், நடனம் போன்ற பாரம்பரிய கலாசார பாட நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு, அதில் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் நன்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2024இல் வெளியிடப்பெற்றது.